உத்தமபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் திரு.கா.சின்னச்சாமிபாண்டியன்.,

ம.பி.எண். 3/2023

நாள்.22 .12.2023

பொருள் : மனைப்பிரிவு – தேனி மாவட்டம் – உத்தமபாளையம் தேர்வுநிலைப் பேரூராட்சி – உத்தமபாளையம் வருவாய் கிராமம் நில அளவை எண். 1839/1 இல் 1154 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்கி – ஆணையிடுதல்.

பார்வை : 1) உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, தேனி அவர்களின் தொழில் நட்ப அனுமதி ந.க.எண் THENI/JS0LRMO1/2023/TCP2/2023/TCP நாள் . 15.09.2023

2) திரு.அ.சிவக்குமார், சின்னமனூர் , தேனி மாவட்டம் என்பவரது இணையதள விண்ணப்ப மனு நாள். 17.08.2023

3) உத்தமபாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திரப் பதிவு எண். 385/2023 நாள். 10.02.2023

4) அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017

5) அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.02.2019

6) அரசாணை எண். 16 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 31.01.2020

7) அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 23.09.2020

8) அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020

9) அரசாணை எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 22.06.2017.

10) திரு.அ.சிவக்குமார், சின்னமனூர் , தேனி மாவட்டம் என்பவரது கடிதம் நாள் 26.09.2023

11) இளநிலை பொறியாளர், உத்தமபாளையம் பேரூராட்சி தொகுப்பு சான்று நாள். 29.11.2023

12) உத்தமபாளையம் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 224 அனுமதி நாள் 21.12.2023

13) தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை :

தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1 இல் காணும் தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் , தேனி மாவட்டம், உத்தமபாளையம் பேரூராட்சி, உத்தமபாளையம் வருவாய் கிராமம் சர்வே எண். 1839/1 இல் 1154 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை 2 இல் காணும் மனுதாரரான திரு.அ.சிவக்குமார்., என்பவரது விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக நிபந்தனைகளுக்குட்பட்டு THENI/JS0LRMO1/2023/TCP2/2023/TCP என எண்ணிடப்பட்டு 7 (1 (1முதல் 7 வரையிலான) மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.அ.சிவக்குமார் என்பவரது பார்வை 3இல் காணும் தானப்பத்திரத்தின்படி, உத்தமபாளையம் சார்பதிவாளர் பத்திரப்பதிவு அலுவலக ஆவண எண். 385/2023 நாள். 10.02.2023 இன்படி பாதைக்கான இடத்தினை மேதகு தமிழ்நாடு ஆளுநர்அவர்களது பெயரில் பதிவு செய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பாதைக்கான சாலைகளில் மழைநீர் வடிகால், தார்ச்சாலை மற்றும் சிறுபாலங்கள் மனைப்பிரிவு உரிமையாளரால் தனது சொந்த செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளமைக்கு பேரூராட்சி பொறியாளரால் சான்றிக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, பார்வையில் காணும் அரசாணைகள் 5, 6 மற்றும் 8 இன்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், அரசாணை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017 இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத் தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	கட்டண விவரம்	தொகை	வரைவோலை எண் மற்றும் நாள்.
1.	கூர்ந்தாய்வுக் கட்டணம்	1000	இணையதள வழி தொகை செலுத்தப் பட்டது
2.	நிலப்பயன்பாட்டு மாற்றக் கட்டணம் ஏக்கருக்கு ரூ.350000/- வீதம் 0.29 ஏக்கருக்கு தொகை ரூ. 101500இக்கு 3 சதவீதம்	3045	
3.	மனைப்பிரிவு முறைப்படுத்துதல் கட்டணம் பிளாட் 1 க்கு 1000 வீதம் 7 பிளாட்டுக்கு	7000	
4.	டேவணித்தொகை	25000	வங்கி வரைவோலை எண் 631467 நாள் 08.12.2023

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், உத்தமபாளையம் பேரூராட்சி உத்தமபாளையம் வருவாய் கிராம சர்வே எண். 1839/1 இல் 1154 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு, தேனி நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி THENI/JS0LRMO1/2023/TCP2/2023/TCP என எண்ணிடப்பட்டு 7 (1 (1முதல் 7 வரையிலான) மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படியும், பார்வை 12இல் காணும் விவரப்படி உத்தமபாளையம் பேரூராட்சி மன்றம் அனுமதி வழங்கியதன் பேரில் நகர் ஊரமைப்புபத்துறையினரால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிட வரி வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

செயல் அலுவலர்
தேர்வுநிலைப் பேரூராட்சி
உத்தமபாளையம் 625 533
தேனி மாவட்டம்.

இணைப்பு : மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள் .

பெறுநர் :-

திரு.அ.சிவக்குமார்,
சின்னமனூர்
தேனி மாவட்டம்.

நகல் :-

1) தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2) தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3) உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4) சார்பதிவாளர், உத்தமபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது,